பெயர்__________ தேதி __________

# பதிலுக்குப் பதில்



குளக்கரையில் ஆமை ஒன்று வசித்து வந்தது. ஒருநாள் சில பறவைக் கூட்டங்கள் குளக்கரைக்கு வந்தன. தனது  சிறகுகளை ஒன்றின் மீது ஒன்று பட பட வென அடித்து விளையாடின. மீன்களையும் தின்றன. தண்ணீரையும் குடித்தன. அப்போது ஒரு குறும்புக்கார பறவை ஆமையைப் பார்த்து ‘அங்கே பாருங்கள்! பாறை நகர்கிறது’ என்று கூறியது. ‘காகிதங்கள் காற்றில் பறக்கும் போது பாறை நகராதா? ‘என்றது ஆமை. ‘காகிதங்களா?... ‘ஆச்சரியத்துடன் கேட்டன பறவைகள். ‘ஆமாம் நீங்கள் தான் வெள்ளைக் காகிதங்கள். காகிதங்கள் தானே காற்றில் பறக்கும்.’ ‘அட! கோபப்படாமல் பதிலுக்குக் கேலி செய்கிறாயே!’ என்று சிரித்தன. அன்றிலிருந்து பறவைகளும் ஆமையும் சிறந்த நண்பர்களாயினர்.



பெயர்__________ தேதி __________

# பதிலுக்குப் பதில்

**பயிற்சிகள்:**

**<u>கோடிட்ட இடத்தை நிரப்புக:</u>**

அ. ஆமை ---------------- வசித்தது.

ஆ. ---------------- நகர்கிறது.

**<u>பொருத்துக:-</u>**

| | |
|---|---|
| பறவை | பாறை |
| சிறகு | காகிதம் |
| ஆமை | படபட |

**<u>சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது.</u>**

1. பறவைகள் ------------- உண்டு தண்ணீரையும் குடித்தன. (பூச்சிகளை/மீன்களை)

2. ------------- யும் ஆமையும் சிறந்த நண்பர்கள். (பறவை/பரவை)

**<u>வினாக்கள்:</u>**

1. ஆமையும் பறவையும் உரையாடியதைக் குறித்து எழுது?

2. வெள்ளைக்காகிதங்கள், பாறை என அழைக்கப்பட்டவை எவை எவை?

3. கேலிப்பேச்சு பேசுவதால் ஏற்படும் தீமைகளை நீ அறிவாயா? அதனை உன் ஆசிரியருடன் விவாதி.